## நாளும் பாராயணம் செய்ய நல்ல நூல்கள்

- சங்கடஹர சதுர்த்தி வழிபாடு
- விநாயகர் 1008 போற்றி வழிபாடு
- முருகப் பெருமான் 1008 போற்றி வழிபாடு
- சிவபெருமான் 1008 போற்றி வழிபாடு
- சரபேஸ்வரர் வழிபாடு
- ஸ்ரீலட்சுமி குபேர பூஜை
- மங்களம் அருளும் மகாலட்சுமி
- ஐஸ்வர்யம் தரும் அம்பிகை 1008 போற்றி வழிபாடு
- ஸ்ரீ அபிராமி அந்தாதி (மூலமும் -உரையும்)
- கஷ்டங்கள் தீர்க்கும் காயத்ரீ வழிபாடு
- மஹிஷாஸுரமர்த்தினி ஸ்தோத்திரம்
- ஸ்ரீ சந்தோஷி மாதா துதிப்பாடல்கள்
- ஸௌந்தர்ய லஹரி தமிழ்ப் பாடல்கள்
- அம்பிகை வழிபாடு
- ஸ்ரீஆஞ்சநேயர் வழிபாடு
- ஸ்ரீ ஸத்ய நாராயண வழிபாடு
- சங்கடம் தீர்க்கும் சக்கரத்தாழ்வார் வழிபாடு
- சுந்தர காண்டம்
- நலம் தரும் நவக்கிரக வழிபாடு
- பைரவர் வழிபாடு
- ஸ்தோத்திரத் திரட்டு
- அஷ்டோத்திர சதம்பம்
- கவசத் திரட்டு



**சகுந்தலை நிலையம்**

18/171,பவளக்காரத்தெரு, மண்ணடி,
சென்னை- 600 001
தொலைபேசி : 25250092


# மாரியம்மன் தாலாட்டு



# மாரியம்மன் தாலாட்டு

இரா. இளையபெருமாள்


**சகுந்தலை நிலையம்**

18, (171), பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
போன் : 25250092

## நூல் விவரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | மாரியம்மன் தாலாட்டு |
| தொகுப்பாசிரியர் | : | இரா. இளையபெருமாள் |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | முதல் பதிப்பு - ஆகஸ்டு, 1994<br>21ஆம் பதிப்பு - ஏப்ரல், 2013 |
| பதிப்புரிமை | : | © சகுந்தலை நிலையம் |
| தாள் | : | 14.4 கி.கி. வெள்ளைத் தாள் |
| நூல் அளவு | : | ஆஃப் டெம்மி |
| எழுத்து | : | 10 புள்ளிகள் |
| பக்கங்கள் | : | 32 |
| பைண்டிங் | : | பின்னிங் |
| விலை | : | ரூ. 10.00 |
| ஒளி அச்சு | : | விக்னேஷ்வர் கிராபிக்ஸ்<br>சென்னை - 600 005. |
| அச்சிட்டோர் | : | பரமேஸ்வரி கிராபிக்ஸ்<br>சென்னை - 600 005. |
| நூல் வெளியீடு | : | சகுந்தலை நிலையம்<br>சென்னை - 600 001. |


# மாரியம்மன் தாலாட்டு

## விநாயகர் துதி காப்பு

### கொச்சகக் கலிப்பா

பூதலத்தில் யாவர்களும் பேராதரவா எந்நாளும்
மாதரசி என்று வாழ்த்துகின்ற மாரியம்மன்
சீதானோர் தங்கை சிறப்பான தாலாட்டைக்
காதலுடனோதக் கணபதி தன்காப்பாமே

### வெண் செந்துரை

முந்தி முந்திவிநாயகனே முக்கண்ணார்தன்மகனே
கந்தருக்கு முன்பிறந்த கற்பகமே முன்னடவாய்
வேலருக்கு முன்பிறந்த விநாயகரே முன்னடவாய்
வேம்படியிற்பிள்ளையாரே விக்கினரேமுன்னடவாய்
பேழைவயிற்றோனே பெருச்சாளிவாகனரே
காரணமால்மருகா செல்வக்கணபதியே
சீரானநல்மருகா செல்வக்கணபதியே
ஒற்றைக்கொம்போனே உமையாள் திருமகனே
கற்றைச் சடையணிந்த கங்காதரன் மகனே
வித்தைக்குவினாயகனே வெண்ணெயுண்டோன்மருகா
மத்தகரிமுகவா மாயோன்மருகோனே
ஐந்துகரத்தோனே யானைமுகத்தோனே
தந்தமதவாரணனே தற்பரனேமுன்னடவாய்

நெஞ்சிற்குடியிருந்து நீயெனக்கு முன்னடவாய்
பஞ்சஞ்சுமெல்லடியாள் பார்வதியாள்புத்திரனே
வேழமுகத்தோனே விநாயகரே முன்னடவாய்
சடைபுனையுஞ்சங்கரனார் சற்புத்திராவாருமையா
முன்னடக்கும்பிள்ளையார்க்கு கண்ணடக்கம் பொன்னாலே
கண்ணடக்கம்பொன்னாலே காற்சிலம்புமுத்தாலே
முத்தாலே தண்டைகொஞ்ச முன்னடவாய் பிள்ளையாரே
செல்வக்கணபதியுன் சீர்பாதம்நான்மறவேன்

## சரஸ்வதி துதி

தாயே சரஸ்வதி சங்கரியே முன்னடவாய்
என்தாயே கலைவாணி ஏகவல்லி நாயகியே
வாணி சரஸ்வதியே என்வாக்கில் குடியிருந்து
என்நாவில் குடியிருந்து நல்லோசை தாருமம்மா
கமலாசனத்தாளே காரடிபெற்றவளே
என் குரலிற்குடியிருந்து கொஞ்சடி பெற்றவளே
என் நாவுதவறாமல் நல்லோசைதாருமம்மா
மாரியம்மன்தன் கதையை மனமகிழ்ந்து நான்பாட
படவேட்டமர்ந்தவளே பரசுராமனைப் பெற்றவளே
கன்னனூர் மாரிமுத்தைக் கைதொழுது நான்பாட
பின்னமொன்று மில்லாமற் புறமிருந்துகாருமம்மா.

## மாரியம்மன் துதி

மாயிமகமாயி மணிமந்திரசேகரியே
ஆயுவுமையவளே ஆதிசிவன் தேவியரே
மாரித்தாய்வல்லியரே மகராசிவாருமம்மா
மாயன்சகோதரியே மாரிமுத்தே வாருமம்மா
ஆயன்சகோதரியே ஆஸ்தானமாரிமுத்தே
தாயேதுரந்தரியே சங்கரியே வாருமம்மா
திக்கெல்லாம் போற்றும் எக்காலதேவியரே
எக்காலதேவியரே திக்கெல்லாம் நின்றசக்தி

கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே நாரணனார் தங்கையம்மா
நாரணனார் தங்கையம்மா நல்லமுத்துமாரியரே
நல்லமுத்துமாரியரே நாககன்னிதாயாரே
உன் - கரகம் பிறந்ததம்மா கன்னனூர்மேடையிலே
உன் - வேம்பு பிறந்ததம்மா விஜயநகர்பட்டணமாம்
உன் - சூலம் பிறந்ததம்மா துலங்கு மணிமண்டபத்தில்
உன்- அலகு பிறந்ததம்மா அயோத்தி நகர்பட்டணமாம்

உன் - சிலம்பு பிறந்ததம்மா சிவலிங்க பாறையிலே
உன் - பிரம்பு பிறந்ததம்மா பிச்சாண்டி சந்நிதியாம்
உன் - உடுக்கை பிறந்ததம்மா உத்திராக்ஷ பூமியிலே
உன் - பம்பை பிறந்ததம்மா பளிங்குமாமண்டபத்தில்
உன் - கருத்து பிறந்ததம்மா கஞ்சகிரியிந்திரபுரம்
உன் - குமாரவர்க்கந் தான்றழைக்க காம்பனையே மாரிமுத்தே
உனக்கு மூன்று கரகமம்மா முத்தானநாற்கரகம்
உனக்கு ஐந்துகரகமம்மா அசைந்தாடும் பொற்கரகம்

உனக்கு ஏழுகரகமம்மா எடுத்தாடும் பொற்கரகம்
உனக்கு பத்துகரகமம்மா பதிந்தாடும் பொற்கரகம்
வேப்பிலையும் பொற்கரகம் வீதிவிளையாடி வர
ஆயிரம் கண்ணுடையாள் அலங்காரி வாருமம்மா
பதினாயிரங்கண்ணுடையாள் பராசக்தி வாருமம்மா
துலுக்காண எல்லையெல்லாம் குலுக்காடப் பெண்பிறந்தாய்
துலுக்காணத்தெல்லைவிட்டு துரந்தரியே வாருமம்மா
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா

மலையாளதேசமெல்லாம் விளையாடப் பெண்பிறந்தாய்
மலையாளதேசம் விட்டு வாருமம்மா இந்தமுகம்
சமைந்தாய் சமயபுரம் சாய்த்தாய் கன்னபுரம்
இருந்தாய்விராடபுரம் இனியிருந்தாய்கன்னபுரம்
சமயபுரத்தாளே சாம்பிராணிவாசகியே
சமயபுரத்தெல்வைலவிட்டு தாயாரேவாருமம்மா
கன்னபுரத்தாளே காரணிசவுந்தரியே
கன்னபுரத் தெல்லைவிட்டு காரணியேவந்தமரும்

கடும்பாடி எல்லை எல்லாங் காவல்கொண்ட மாரிமுத்தே
ஊத்துக்காட்டமர்ந்தவலளே உதிரபலிகொண்டவளே
படவேட்டமர்ந்தவளே பரசுர்ாமனைப் பெற்றவளே
படவேட்டைவிட்டு மெள்ளப் பத்தினியே வாருமம்மா
பெரியபாளையத்தமர்ந்த பேச்சியெனுமாரியரே
பெரியபாளையத்தைவிட்டு பேரரசி வாருமம்மா
ஆரணிபெரியபாளையமாம் மதிலிருக்கும் ஆற்றங்கரை
ஆற்றங்கரை மேடைவிட்டு ஆச்சியரே வாருமம்மா

விராமபட்டணமர்ந்த வேதாந்த மாரிமுத்தே
கோலியனூரெல்லையிலே குடிகொண்ட மாரிமுத்தே
அந்தரத்திற்றேரோட அருகே செடிலசைய



உச்சியிற்றேரோட உயர்ந்த செடிலசைய
மச்சியிற்றேரோட மகரச்செடிலசைய
பக்கங்கயிறோட பாரச்செடிலசைய
ஆண்டகுருதேசிகரை அறியாதமானிடரைத்
தூண்டிவிட்டு ஆட்டிவைக்கத் தோன்றினாய் நீயொருத்தி

சதியாய்நீ அமர்ந்தாய்த் தனிப்பசுகாவுகொண்டாய்
எல்லையிலே நீயமர்ந்தாய் எருமைகிடாகாவு கொண்டாய்
உன்னைப்போல் தெய்வம் உலகத்தில் கண்டதில்லை
என்னைப்போல் பிள்ளைகள் தானெங்குமுண்டு வையகத்தில்
கோத்தமுத்துவடமசைய கொங்கைரெண்டும் பாலொழுக
ஏற்றவர்க்கு வரந்தருவாய் எக்காலதேவியரே
எக்காலதேவியரே திக்கெல்லாமாண்டவளே
திக்கெல்லாமாண்டவளே திகம்பரியே வாருமம்மா

முக்கோண சக்கரத்தில் முதன்மையாய் நின்றசக்தி
அக்கோணந்தனில்வந்து ஆச்சியரே வந்தமரும்
தாயே துரந்தரியே சங்கரியே வாருமம்மா
மாயிமருளியரே மணிமந்திர சேகரியை
வல்லாண்மைக்காரியரே வழக்காடும் மாரிமுத்தே
வல்லாரைக் கொன்றாய் நீ வலியவரை மார்பிளந்தாய்
நீலிகபாலியம்மா நிறைந்த திருச்சூலியரே
நாலுமூலையோமகுண்டம் நடுவேகனகசபை

கனகசபைவீற்றிருக்கும் காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே நாரணனார் தங்கையரே
நாரணனார் தங்கையரே நல்லமுத்துமாரியரே
நடலைச் சுடலையம்மா நடுச்சுடலை தில்லைவனம்
தில்லைவனத்தெல்லைவிட்டு திரும்புமம்மாயிந்தமுகம்
வார்ப்புச்சிலையாளே வஜ்ஜிரமணித்தேராளே

தூண்டித்துடைப்பருமன் தூண்டி முள்ளுநகைப் பருமன்
மண்டையிலே தைத்தமுள்ளு மார்புருகிப் போகுதம்மா

பக்கத்திற்தைத்தமுள்ளு பதைத்துத் துடிக்குதம்மா
தொண்டையிலே தைத்தமுள்ளு தோளுருகிப் போகுதம்மா
கத்திபோல் வேப்பிலையை கதறவிட்டாய் லோகமெங்கும்
ஈட்டிபோல் வேப்பிலையை யினியனுப்பிக் கொண்டவளே
பத்திரிக்குள்ளிருக்கும் பாவனையையாரறிவார்
வேப்பிலைக்குள்ளிருக்கும் வித்தைதனையாரறிவார்
செடிலோ துடைப்பருமன் தூண்டு முள்ளுநகைப்பருமன்
தூண்டிமுள்ளைத்தூக்கித் துடுக்கடக்கும்மாரிமுத்தே

ஒற்றைச் செடிலாட ஊரனைத்தும் பொங்கலிட
இரட்டைச்செடிலாட இரண்டமனைத்தும் பொங்கலிட
பக்கச்செடிலாட படைமன்னர் கொக்கரிக்க
பரமசிவன் வாசலிலே பாற்பசுகாவுகொண்டாய்
எமனிடவாசலிலே எருமைகிடா காவுகொண்டாய்
எருமைகிடா காவுகொண்டாய் எக்காலதேவியரே
எக்காலதேவியரே திக்கெல்லாமாண்டசக்தி
காசிவள நாட்டாளே கன்னியாக்குமரியரே

காசிவள நாட்டைவிட்டு கட்டழகிவாருமம்மா
ஊசிவளநாடு உத்தியாக்குமரிதேசம்
அறியாதாள் பாடுகிறேன் அம்மைத்திருக்கதையை
தெரியாதாள் பாடுகிறேன் தேவிதிருக்கதையை
எட்டிரெண்டு நானறியேன் ஏழையம்மாவுன்னடிமை
பத்தென்றாலொன்றறியேன் பாலனம்மாவுன்னடிமை
பாடவகையறியேன் பாட்டின் பயனறியேன்
வருந்தவகையறியேன் வர்ணிக்கப்பேரறியேன்



பேருமறியேனம்மா பெற்றவளேயென்தாயே
குழந்தை வருந்துவது கோவிலுக்குக் கேட்கலையோ
மைந்தன் வருந்துவது மாளிகைக்குக் கேட்கலையோ
பாலன் வருந்துவது பார்வதியே கேட்கலையோ
கோயிலடிமையம்மா கொண்டாடும் பாலனம்மா
மாளிகையைவிட்டு மாதாவே வாருமம்மா
சந்நிதியைவிட்டு தாயாரே வாருமம்மா
அரண்மனையைவிட்டு ஆத்தாளே வாருமம்மா

கோயிற்கடிமையம்மா கொண்டாடும் பாலனம்மா
சந்நிதிமைந்தனம்மா சங்கரியே பெற்றவளே
வருந்தியழைக்கின்றேனே வண்ணமுகங்காணாமல்
தேடியழைக்கின்றேனே தேவிமுகங்காணாமல்
ஏழைக்குழந்தையம்மா எடுத்தோர்க்குப் பாலனம்மா
பாலன் குழந்தையம்மா பார்த்தார்க்குப் பாலனம்மா
மைந்தன் குழந்தையம்மா மகராசிகாருமம்மா
கல்லோ உன்மனது கரையலையோ எள்ளளவும்

இரும்போ உன்மனது இரங்கலையோ எள்ளளவும்
கல்லுங்கரைந்திடுமுன் மனங்கரையாதென்னவிதம்
இரும்புமுருகிடு முன்னிருதயமுருகாதென்னவிதம்
முன்செய்த தீவினையோ முற்காலத்துப் பயனோ
பெரியோர் செய்தீவினையோ பெற்றவளே சொல்லுமம்மா
ஏதுமறியேன் நான் ஈஸ்வரியே சொல்லுமம்மா
கடும்பாடி எல்லையிலே கட்டழகிவீற்றிருந்தாய்
கடும்பாடி எல்லைவிட்டு கட்டழகிவாருமம்மா

கரகத்தழகியரே கட்டழகிமாரிமுத்தே
கரகத்துமீதிருந்து கட்டழகி கொஞ்சுமம்மா
கும்பத்தழகியம்மா கோபாலன் தங்கையரே

கும்பத்துமீதிருந்து கொஞ்சுமம்மா பெற்றவளே
கொஞ்சுமம்மா பெற்றவளே குறைகள் ஒன்றும்வாராமல்
உனக்கு - பட்டுபளபளென பாடகக்கால்சேறாட
உனக்கு முத்துமொளமொளென மோதிரக்கல் சேறாட
உலகமெல்லாம் முத்தெடுப்பாய் உள்ளபடிதான் வந்தாய்

தேசமெல்லாம் முத்தெடுப்பாய் தேவி கன்னனூராளே
முத்தெடுத்துத்தான் புகுந்தாய் உத்தமியே மாரிமுத்தே
உனக்கு தாழங்குறக்கூடை தனிக்கட்டும் பொன்னாலே
குறக்கூடைமுத்தெடுத்துக் கொம்பனையே நீபுகுந்தாய்
கோவிலின் சந்தடியில் கூப்பிட்டால் கேளாதோ
அரண்மனைச் சந்தடியில் அழைத்தாலுங்கேளாதோ
மாளிகையின் சந்தடியில் மாதாவே கேட்கிலையோ
மக்களின் சந்தடியோ மருமக்கள் சந்தடியோ

பிள்ளைகள் சந்தடியோ பேரன்மார் சந்தடியோ
அனந்தல் பெருமையோ ஆசார சந்தடியோ
சந்தடியை நீக்கியம்மா தாயாருமிங்கேவா
கொல்லிமலையாண்டவனைக் குமரகுருபரனை
காத்தவராயனைத்தான் கட்டழகிதானழையும்
தொட்டியத்துச் சின்னானைத் துரைமகனைத் தானழையும்
மதுரை வீரப்பனையென் மாதாவேதானழையும்
பாவாடைராயனைத்தான் பத்தினியேதானழையும்

கருப்பண்ணசுவாமியையுங் கட்டழகிதானழையும்
சங்கிலிக்கருப்பனைத்தான் சடுதியிற்றானழையும்
முத்தாலுராவுத்தன் மூளையுள்ள சேவகனை
பெரியபாளையத்தமர்ந்த பேச்சியென்னும்மாதாவே
பாளையக்காரியம்மா பழிகாரிமாரிமுத்தே
கன்னனூர் மாரிமுத்தே கலகலென்று நடனமிடும்



உன்னைப் பணிந்தவர்க்கு உற்றதுணை நீயிரம்மா
ஆதிபரமேஸ்வரியே அருகே துணையிரம்மா

உன்னைப்போல் தெய்வத்தை உலகத்தில் கண்டதில்லை
என்னைப்போல் மைந்தர்பலர் எங்குமுண்டு வையகத்தில்
உன்மகிமையறிந்தவர்கள் மண்டலத்தில் யாருமில்லை
உன்சேதியறிவாரோ தேசத்துமானிடர்கள்
உன்மகிமை நானறிந்து மண்டலத்தில் பாடவந்தேன்
உன்மகிமையறியாதுலகில் மாண்டமனுகோடியுண்டு
உன்சேதியறியா துலகில் மாண்டமனுகோடியுண்டு
தப்புபிழை வந்தாலும் சங்கரியே நீ பொறுத்து

ஆறுதப்பு நூறுபிழை அடியார்கள் செய்ததெல்லாம்
மனமதுநீ பொறுத்து மனமகிழ்ச்சியாகவேணும்
தேவிமனம் பொறுத்து தீர்க்கமுடன் ரக்ஷியம்மா
கொண்டுமனம் பொறுத்து கொம்பனையே காருமம்மா
காக்கக்கடனுனக்கு காரணசவுந்தரியோ
காரடிபெற்றவளே காலுதலைநோகாமல்
வேணுமென்றுகாரடி நீ வேப்பஞ்சிலையாளே
பக்கந்துணையிருந்து பாலகனைக்காருமம்மா

பொரிபோலெழும்பி நீபூரித்து ஆலித்து
ஆலித்து நீயெழும்பு ஆத்தாளிறங்குமம்மா
சிரசினில் முத்தையம்மா தற்காத்து நீயிறக்கும்
முகத்தினில் முத்தையம்மா முன்னதா நீயிறக்கும்
கழுத்தினில் முத்தையம்மா கட்டழகி நீயிறக்கும்
தோளினில் முத்தையம்மா துரந்திரியே நீயிறக்கும்
மார்பினில் முத்தையம்மா மாதாவே நீயிறக்கும்
வயிற்றினில் முத்தையம்மா மஹேஸ்வரியே நீயிறக்கும்

துடையினில் முத்தையம்மா தேவியரே நீயிறக்கும்
முழங்காலில் முத்தையம்மா மீனாட்சி நீயிறக்கும்
கணுக்காலில் முத்தையம்மா காமாட்சி நீயிறக்கும்
பாதத்தில் முத்தையம்மா பாரிலிறக்கிவிடும்
பூமியிலிறக்கிவிடும் பெற்றவளே காருமம்மா
பெற்றவளே என்தாயே பேரரசிமாரிமுத்தே
உற்றதுணை நீயிருந்து உகந்தரியேகாருமம்மா
உன்னைவிட பூமிதனிலுறுதுணை வேறுமுண்டோ

பக்கத்துணையிருந்து பாதுகாத்து ரட்சியம்மா
செக்கச்சிவந்தவளே செங்கண்ணன் தங்கையரே
மங்கையெனும்மாதரசி மகராசி காருமம்மா
திங்கள் வனிதையரே தேவிகன்னனூராளே
எங்கள்குல தேவியரே ஈஸ்வரியே கண்பாரும்
மங்களவிநோதி மாதாவே கண்பாரும்
ஏழைக்கிரங்காமல் இப்படியே நீயிருந்தால்
வாழ்வதுதானெக்காலம் வார்ப்புச் சிலையாளே

ஆயிமகமாயி ஆரணஞ்சொற்காரணியே
மாயிமகமாயி மணிமந்திரசேகரியே
இரங்கிரங்குந்தாயாரே எங்களைக் காப்பாற்றுமம்மா
மாரித்தாய்வல்லியே மகராசிகாருமம்மா
வீரணன் சோலையிலே ஆரணமதானசக்தி
நீதிமன்னர் வாசலிலே நேராய்கொலுவிருந்தாய்
கொலிவிருந்தசக்தியரே கோத்தமுத்து நீயிறக்கும்
கோத்தமுத்து நீயிறக்கும் கொம்பனையே மாரிமுத்தே

போட்டமுத்து நீயிறக்கும் பொய்யாதவாசகியே
பொய்யாத வாசகியே புண்ணியவதி ஈஸ்வரியே
செடிலோ துடைப்பருமன் தூண்டிமுள்ளோகைப் பருமன்



அடங்காத மானிடரை ஆட்டி வைக்கும் மாரிமுத்தே
துஷ்டர்கள் தெண்டனிடத் துடுக்கடக்கும் மாரிமுத்தே
கண்டவர்கள் தெண்டனிடக் கலக்கமிடும் மாரிமுத்தே
அண்டாதபேர்களிட ஆணவத்தை தானடக்கி
இராஜாக்களெல்லோரும் நலமாகத்தான் பணிய

மகுடமுடி மன்னர் மனோன்மணியைத்தான் பணிய
கிரீடமணி தரித்த கீர்த்தியுள்ள ராஜாக்கள்
மகுடமுடி மந்திரிகள்வந்து மன்னித் தெண்டனிட்டுநிற்க
பட்டுத்துரைகள் படைமுகத்துராஜாக்கள்
வெட்டிக்கெலித் துவரும் வேதாந்தவேதியர்கள்
துஷ்டர்களைத் தானடக்கும் சூலிகபாலியம்மா
அடங்காத மானிடரை அடிமைபலிகொண்ட சக்தி
மிஞ்சிவரும் ராட்சதரை வெட்டிவிருதுண்ட கண்ணே

தஞ்சமென்ற மானிடரைத் தற்காக்கும் தயாபரியே
அவரவர் தாம்பணிய ஆக்கினையைப் பெற்றவளே
சிவனுடன் வாதாடும் சித்தாந்த மாரிமுத்தே
அரனுடன் வாதாடும் ஆஸ்தான மாரிமுத்தே
பிரமனுடன் வாதாடும் பெற்றவளே மாரிமுத்தே
விஷ்ணுவுடனே வாதாடும் வேதாந்த மாரிமுத்தே
எமனுடன் வாதாடும் எக்கால தேவியரே
தேவருடன் வாதாடும் தேவிகன்னனூராளே

கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
காரணசவுந்தரியே கர்த்தரிட தேவியரே
நெருப்பம்மா உன் சொரூபம் நிஷ்டூரக்காரிகையே
அனலம்மா உன்சொரூபம் ஆஸ்தான மாரிமுத்தே
கனலம்மா உன்சொரூபம் தரிக்கமுடி போகாது
அண்டாநெருப்பேயம்மா ஆதிபரமேஸ்வரியே

காத்தனைப்பெற்றவளே கட்டழகி மாரிமுத்தே
தொட்டியத்துச் சின்னானைத் தொழுதுவரப்பண்ண சக்தி

கருப்பனையுங்கூடவேதான் கண்டு பணியவைத்தாய்
பெண்ணரசிக்காகப் பிள்ளையைக்கழுவில் வைத்தாய்
ஆணழகிக்காகப் பிள்ளையைக்கழுவில் வைத்தாய்
அடங்காத பிள்ளையென ஆண்டவனைக் கழுவில் வைத்தாய்
துஷ்டனென்று சொல்லித் துடுக்கடக்கிக் கழுவில் வைத்தாய்
பாரினில் முத்தையம்மா பத்தினியே தாயாரே
வாரியெடுக்கவொரு வஞ்சியரையுண்டுபண்ணாய்
முத்தெடுக்குந்தாதி மோகனப் பெண்ணையென்று

தாதியரைத் தானழைத்துப் தாயாரே முத்தெடுப்பாய்
முத்தெடுத்து தான்புகுந்து உத்தமியாள் மாரிமுத்தே
மாயி மகமாயி மணிமந்திரச் சேகரியே
ஆயிவுமையவளே ஆஸ்தான மாரிமுத்தே
பாரமுத்தை நீயிறக்கிப் பாலகனைக்காருமம்மா
காரடிபெற்றவளே காலுதலை நோகாமல்
சொற்கேளாபிள்ளையென்று தூண்டிக்கழுவில் வைத்தாய்
கழுதனக்கு மோர்வார்க்கக் கட்டழகியுண்டு பண்ணாய்

நல்லதங்கையுண்டு பண்ணாய் நற்கழுவுக்கு மோர்வார்க்க
உரியில் தயிர்வார்க்க உத்தமியேயுண்டு பண்ணாய்
உன்மகனைக் காத்தாற் போலிவ்வடிமையைக் காருமம்மா
எவ்வளவு நேரமம்மா ஏறெடுத்துப் பாருமம்மா
கடுகளவுநேரமம்மா கண்பார்க்க வேணுமம்மா
கடைக்கண்ணால் நீபார்த்தால் கடைத்தேறிப் போவேனம்மா
பாரளந்தோன் தங்கையரே பாலகனைக்காருமம்மா
பேரரசிமாரிமுத்தே மைந்தர்களைக் காருமம்மா



மகமாயி மாரிமுத்தே மைந்தர்களைக் காருமம்மா
பெற்றவளே மாரிமுத்தே பிள்ளைகளைக் காருமம்மா
ஆரழகி மாரிமுத்தே அடிமைகளைக் காருமம்மா
பூணாரம் பூண்டசக்தி பிள்ளைகளைக் காருமம்மா
பாரமெடுக்கவேதான் பாலகனாலாகுமோதான்
பூணாரம்தானெடுக்கப் பிள்ளைகளாலாகுமோதான்
வருத்தப்படுத்தாதே மாதாவேகண்பாரும்
பாலன்படுந்துயரம் பாக்கியவதி பார்க்கிலையோ

மைந்தன்படுந்துயரம் மாதாவே பார்க்கிலையோ
குழந்தைபடுந்துயரம் கொம்பனையே பார்க்கிலையோ
சிற்றடிகள் படுந்துயரம் தேவியரே பார்க்கிலையோ
பூணாரமுத்திரையை பெற்றவளே தானிறக்கும்
ஆபரணமுத்திரையை ஆத்தாளிறக்குமம்மா
இரங்கிரங்குந்தாயாரே எங்களைக் காப்பாற்றுமம்மா
அடிமைதனைக் காப்பாற்றி ஆணழகி நீயிறக்கும்
கும்பத்துமாரியரே கொலுவிலலங்காரியரே

கொலுவிலலங்காரியரே கோத்தமுத்து நீயிறக்கும்
கோத்தமுத்து நீயிறக்கும் கொம்பனையே மாரிமுத்து
மாரியென்றால் மழைபொழியும் தேவியென்றால் தேன்சொரியும்
தேவியென்றால் தேன்சொரியும் திரிபுரசுந்தரியே
திரிபுரசுந்தரியே தேசத்துமாரியே
பொன்னுமுத்துமாரியரே பூரணசவுந்தரியே
தாயாரே பெற்றவளே சத்தகன்னி சுந்தரியே
பேருமறியேனம்மா பெற்றவளே தாயாரே

குருடன் கைக்கோலென்று கொம்பனையே நீயறிவாய்
கோலைப்பிடுங்கிக்கொண்டால் குருடன் பிழைப்பானோ
இப்படிக்கு நீயிருந்தாலினிப் பிழையோம் தாயாரே

கலிபிறக்குமுன் பிறந்த கனத்ததோர் மாரிமுத்தே
யுகம்பிறக்குமுன் பிறந்த உத்தண்ட மாரிமுத்தே
கலியுகத்தில் தாயே கண்கண்ட தெய்வம் நீ
உன்னைப்போல் தெய்வம் உலகத்தில் கண்டதில்லை
என்னைப்போல் மைந்தர் யெங்குமுண்டு வையகத்தில்

அனலைமதியாய் நீயாவரையுஞ்சட்டை பண்ணாய்
புனலைமதியாய் நீ பூலோகஞ்சட்டை பண்ணாய்
வருந்தியழைக்கிறேனுன் திருமுகத்தைக் காணாமல்
பாலகனைக் காத்துப் பாதத்தாலுதைத்துவிடு
மைந்தனைக் காத்து நீ மகராசியுதைத்துவிடு
குழந்தையைக்காத்து நீ கொம்பனையே யுதைத்துவிடு
ஆதிபரஞ்சோதி அங்குகண்ணே வாருமம்மா
வெள்ளிக்கிழமையிலே கொள்ளிக்கண்மாரியரே

வெள்ளியிலும் திங்களிலும் வேண்டியபேர் பூசைசெய்ய
பூசைமுகத்திற்குப் போனேனென்று சொல்லாதே
இந்தமனையிடத்து ஈஸ்வரியே வந்தருள்வாய்
வந்தமனை வாழுமம்மா இருந்தமனையீடேறும்
இருந்தமனையீடேற ஈஸ்வரியே வந்தருள்வாய்
கண்பாரும் கண்பாரும் கனகவல்லி தாயாரோ
நண்பான பிள்ளைகளை நலிந்திட நீசெய்யாதே
உன்னை நம்பினாரை ஓய்ந்துவிடச் செய்யாதே

அந்நீதஞ்செய்யாதே ஆயிமகமாயி
வேம்புரதமேறி வித்தகியே வாருமம்மா
பச்சிலைரதமேறி பார்வதியே வாருமம்மா
கொலுவிலிருந்தசக்தி கோத்தமுத்தை நீயிறக்கும்
போட்டமுத்தை நீயிறக்கும் பூலோக மாரிமுத்தே
கேளிக்கையாகக் கனிமொழியே முத்திறக்கும்



அரும்பாலகன் தன்னை அவஸ்தைப்படுத்தாதே
வருத்தப்படுத்தாதே மாதாவே கண்பாரும்

அன்னமிறங்கலம்மா ஆத்தாளே கண்பாரும்
ஊட்டத்தை நீ கொடுத்து உத்தமியே காருமம்மா
இரக்கங்கொடுத்து நீ ஈஸ்வரியே காருமம்மா
காருமம்மா பெற்றவளே காலுதலைநோகாமல்
எங்கேயோ பாராமுகமாயிருந்தேனென்று சொல்லாதே
அந்திசந்தி பூசையிலே அசதியாயெண்ணாதே
ஒட்டாரம்பண்ணாதே ஓங்கார மாரிமுத்தே
பாவாடம் நேருமம்மா பழிகள் வந்து சேருமம்மா

பாவாடம் நேர்ந்ததென்றால் பாருலகு ஏற்காது
கண்டார் நகைப்பார்கள் கலியுகத்தாரேசுவார்
கலியுகத்தாரேசுவார்கள் கட்டழகி மாரிமுத்தே
பார்த்தார் நகைப்பார்கள் பரிகாசம் பண்ணுவார்கள்
உதடுபடைத்தவர்கள் உதாசீனஞ்சொல்லுவார்கள்
பல்லைப்படைத்தவர்கள் பரிகாசம் பண்ணுவார்கள்
நாவைப்படைத்தவர்கள் நாணயங்கள் சொல்லுவார்கள்
பார்த்தோர் நகைக்கவம்மா பரிகாசம் பண்ணாதே

கச்சிப்பதியாளே காமாட்சி தாயாரே
தாயாரே பெற்றவளே தயவுவைத்துக் காருமம்மா
மாதாவே பெற்றவளே மனம்பொறுத்துக் காருமம்மா
பார்வதி பெற்றவளே பட்சம்வைத்துக் காருமம்மா
ஆயிரங்கண்ணுடைய அலங்காரி வாருமம்மா
பதினாயிரம்முத்தினிலே பார்த்தெடுத்த வாணிமுத்து
நூறாயிரம்முத்தினிலே நூற்றெடுத்த வாணிமுத்து
ஆயிரங்கண்முத்துதனி லாத்தாள்வந்தெழுந்தாள்

நாகத்தின் கண்ணேயம்மா நல்லவிடப்பாம்பே
சேஷத்தின் கண்ணேயம்மா சின்னவிடப்பாம்பே
அஞ்சுதலை நாகமம்மா கொஞ்சுவிளையாடுதம்மா
பத்துத்தலை நாகமம்மா பதிந்துவிளையாடுதம்மா
செந்தலை நாகமம்மா சேர்ந்து விளையாடுதம்மா
கருந்தலை நாகமம்மா காக்குதம்மாவுன் கொலுவில்
சேஷனென்ற பாம்பையெல்லாம் சேரவேபூண்டசக்தி
நாகமென்ற பாம்பையெல்லாம் நலமாகப் பூண்டசக்தி

அரவமெனும் பாம்பையெல்லாம் அழகாக பூண்டசக்தி
ஆபரணமாய்ப் பூண்டாய் அழகுள்ள பாம்பையெல்லாம்
நாகங்குடைபிடிக்க நற்பாம்பு தாலாட்ட
பூணாரமாய்ப் பூண்டாயுன் பொன் திருமேனியெல்லாம்
தாலாட்டத் தாலாட்டத் தாயார் மனதிரங்க
சேஷன்குடைகவியச் செந்நாகம்வட்டமிட
வட்டமிட்டு வீற்றிருந்தாய் மாரிகன்னனூராளே
மார்மேல் நாகம்மா மடிமேல்புரண்டாட

தோள்மேல் நாகம்மா துடைமேற்புரண்டாட
மார்மேலும் தோள்மேலும் வண்ணமடிமேலும்
கொஞ்சி விளையாடுதம்மா கோபாலன் தங்கையரே
ஏழையாலாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க
இல்லையென்பார்பங்கில் ஈஸ்வரிமாரிமுத்தே
குழந்தையாலாகுமோதான் கொம்பனையைத் தோத்தரிக்க
அடியேனாலாகுமோதான் ஆத்தாளைத் தோத்தரிக்க
எந்தனாலாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க

நில்லாயரைநாழி நிஷ்டுரி தாண்டவியே
உண்டென் பார்பங்கில் ஒளிவிளக்காய் நின்றசக்தி
பார்த்தோர்க்குச்செல்வனம்மா பாலன் குழந்தையம்மா



உன்னைப்பகைத்தோர்க்கு உறுமார்பிலாணியம்மா
நினைத்தோர்க்குத் தெய்வமம்மா எதிர்த்தாருக்கு மார்பிலாணி
தாயே நீ வாருமம்மா தற்பரையாய் நின்றசக்தி
வாக்கிட்டால் தப்பாது வரங்கொடுத்தால் பொய்யாது
பொய்யாது பொய்யாது பூமலர்கள் பொய்யாது

பூவிரண்டு பூத்தாலும் நாவிரண்டு பூக்காது
மறவரிடவாசலிலே மல்லிகைப்பூ வாசனையை
மறவரறிவாரோ மல்லிகைப்பூ வாசனையை
குறவரிடவாசலிலே குடம்லிபூத்தாலும்
குறவறறிவாரோ குடமல்லி வாசனையை
பன்றி முதுகினில் பன்னீரைப் பூசினக்கால்
பன்றியறியுமோதான் பன்னீரின் வாசனையை
என்னாலேயாகுமோதான் ஈஸ்வரியைத் தோத்தரிக்க

மைந்தனாலாகுமோதான் மாதாவை நமஸ்கரிக்க
பிள்ளையாலாகுமோதான் பெற்றவளை நமஸ்கரிக்க
பாலனாலாகுமோதான் பார்வதியை நமஸ்கரிக்க
எச்சிலொருகோடி இளந்தீட்டு முக்கோடி
தீட்டுமொருகோடி தெருவெங்குந்தாமுண்டு
கன்னிகைகள்தட்டு கலந்தோடிவந்தாலும்
ஆறுதப்புநூறுபிழை அடியார்கள் செய்தாலும்
தாயே மனம்பொறுத்து தயவாகக்காருமம்மா

எச்சிற்கலந்ததென்று இடையேபோய் நிற்காதே
தீட்டுக்கலந்தாலும் தேவி மனம்பொறுத்து
எச்சிற்கலந்தாலும் ஈஸ்வரியே மனம்பொறுத்து
பட்சம்வைத்துக் காருமம்மா பராபரியே அங்குகண்ணே
விருப்பம்வைத்துக்காருமம்மா விருதுபடைத்தசக்தி
நீலிகபாலியம்மா நிறைந்த பஞ்சாட்சரியே

சூலிகபாலியம்மா சுந்தரியே மாரிமுத்தே
நிஸ்டூரகாரியே விஸ்தாரமுள்ள சக்தி

வேப்பிலையால்தான் தடவி விசிறி முத்தழித்துவிடு
ஆனபராசக்தியரே யம்மை முத்தழித்துவிடு
இரங்கிரங்குந்தாயாரே ஈஸ்வரியே நான்பிழைக்க
படவேட்டமர்ந்தவளே பரசுராமனைப் பெற்றவளே
ஊத்துகாட்டமர்ந்தவளே உதிரபலிகொண்டவளே
வீராம்பட்டணமமர்ந்த மாரிமுத்தே
சமைந்தாய் சமயபுரம் சாதித்தாய் கண்ணபுரம்
கண்ணபுரத்தெல்லையெல்லாம் காவல்கொண்ட மாரியரே

எக்காலதேவியரே ஈஸ்வரியேயிறக்குமம்மா
திக்கெல்லாம் பேர்படைத்த தேசத்து மாரிமுத்தே
அண்டபுவனமெல்லாம் புண்டரிகமுள்ளசக்தி
கச்சிப்பதியாளே காமாட்சி தாயாரே
கைலாசலோகமெல்லாம் காவல்கட்டியாண்டவளே
பாதாளலோகமெல்லாம் பரதவிக்கப் பண்ணசக்தி
காலைக்கொலுவிலம்மா காத்திருந்தாராயிரம்பேர்
உச்சிக்கொலுவிலம்மா உகந்திருந்தாராயிரம்பேர்

அந்திக்கொலுவிலம்மா அமர்ந்திருந்தாரயிரம்பேர்
கட்டியக்காரரெல்லாம் கலந்தெச்சரிக்கைபண்ணப்
பாடும்புலவரெல்லாம் பண்பிசைத்துப்பாடல் சொல்ல
வடுகர் துலுக்கரம்மா மராட்டியர்கன்னடியர்
கன்னடியர்காவலுடன் கர்நாட்டுப்பட்டாணியர்
இட்டசட்டைவாங்காத இடும்பரெல்லாம் காத்திருக்க
போட்டசட்டை வாங்காத பொந்திலியர் காத்திருக்க
வடுகர்துலுக்கரம்மா மறுதேசப்பட்டாணியர்



வேடிக்கைபார்த்திருந்தாள் வேப்பஞ்சிலையாளும்
கேளிக்கைபார்த்திருந்தாள் கிளிமொழியாள் மாரிமுத்து
மாயமெல்லாமுன்மாயம் மருளரெல்லாமுன்மருளர்
மருளர்தழைக்கவம்மா மருமக்களீடேற
பொலிசட்டிதானெடுக்கும் புத்திரர்கள் தான்றழைக்க
வேதங்கள் தாம்தழைக்க விண்ணவர்களீடேற
குமாரவர்க்கம்தான் தழைக்கக் கொம்பனையே கண்பாரும்
மைந்தர்கள் தான்தழைக்க மாதாவேகண்பாரும்

காஞ்சிபுரியிலேதான் கர்த்தரையும் நீ நினைத்து
கர்த்தரையும் நீ நினைத்து காமாட்சி பூசைபண்ணாய்
கங்கைமுழுகியம்மா கிளிமொழியே தவமிருந்தாய்
வைகைமுழுகியம்மா வனமயிலே தவமிருந்தாய்
பொய்கைமுழுகியம்மா பெற்றவளே தவமிருந்தாய்
தவத்தில்மிகுந்தவளே சத்தகன்னிதாயாரே
ஆற்றுமணலெடுத்து அரனாரையுண்டுபண்ணாய்
சேற்றுமணலெடுத்துச் சிவனாரையுண்டுபண்ணாய்

கம்பநதிக்கரையில் காமாட்சி தவமிருந்தாய்
இருநூற்றுக்காதவழி திருநீற்றால்கோட்டையிட்டாய்
திருநீற்றால்கோட்டை யிட்டாய் திகம்பரியே மாரிமுத்தே
அருணாசலந்தனிலே ஈசானமூலையிலே
திருவண்ணாமலையிலேதான் தேவிதவமிருந்தாய்
அருணாசலந்தனிலே ஆத்தாள் தவமிருந்தாய்
ஈசான்யமூலையிலே இருந்தாய்பெருந்தவசு
இருந்தாய் பெருந்தவசு இடபாகம் பேறுபெற்றாய்

இடபாகம் பெறுபெற்ற ஈஸ்வரியேமாதாவே
காகமுதுகினிலே கதம்பப்பொடி பூசிவைத்தால்
காகமறியுமோதான் கதம்பப்பொடி வாசனையை

கொக்குமுதுகினிலே கோமேதகம்கட்டி வைத்தால்
கொக்குமறியமோதான் கோமேதகத்தினொளியை
மூலக்கனலதனில் முதன்மையாய் நின்றசக்தி
பாலனுக்குவந்த பாரயெரிச்சல்களில்
காலெரிவுகையெரிவு கட்டழகிவாங்குமம்மா

குத்தல் குடைச்சலோடு குலைமார்புநோவு
மண்டைக்குடைச்சலோடு மாரடைப்பு தலைநோவு
வாதபித்த தீஞ்சுரம் வல்பிணியைவாங்குமம்மா
இடுப்புக்குடைச்சலைத் தானீஸ்வரியேவாங்குமம்மா
பித்தயெரிவுகளைப் பெற்றவளே வாங்குமம்மா
கழுத்துவலியதனைக் கட்டழகிவாங்குமம்மா
பத்திரியால்தான் தடவிபாரமுத்தழித்துவிடு
விபூதியைப்போட்டு இறக்கிவிடு முத்திரையை

வேப்பிலைபட்டவிடம் வினைகள் பறந்தோடுமம்மா
பத்திரிபட்டவிடம் பாபம்பறந்தோடுமம்மா
விபூதி பட்டக்ஷணமமே வினைகள் பறந்தோடுமம்மா
பஞ்சாக்ஷரம்பட்டால் பாவங்கள் தீர்ந்துவிடும்
பத்தென்றாலிரண்டறியேன் பாலனம்மாவுன்னடிமை
எட்டென்றாலிரண்டறியேன் ஏழையம்மா வுன்னடிமை
நாகத்தின் கண்ணேயம்மா நல்லவிடபாம்பே
சேஷத்தின் கண்ணேயம்மா சின்னவிடபாம்பே

பாம்பே தலைக்கணைதான் வேப்பிலையோபஞ்சு மெத்தை
வேப்பம்பாலுண்டவளே வேதாந்த மாரிமுத்தே
ஐந்துநூறுபாம்புனக்கு அள்ளியிட்ட வீரசடை
வீரசடை மேலிருந்து விமலியரே கொஞ்சுமம்மா
முன்னூறுசந்தி முதற்சந்தியுன்னுதென்றாய்
நானூறுசந்தி நடுச்சந்தியுன்னுதென்றாய்



சந்திக்குச்சந்தி தனிச்சந்தியுன்னுதென்றாய்
வீதிக்குவீதி நீ வெளிச்சந்தியுன்னுதென்றாய்

பட்டத்தழகியம்மா படைமுகத்தராஜகன்னி
கன்னபுரத்தாளே காரணசவுந்தரியே
திருவிளக்குநாயகியே தேவிகன்னனூராளே
மணிவிளக்கின் மேலிருந்து மாதாவே கொஞ்சுமம்மா
விளக்கிற்குடியிருந்து மெல்லியரே கொஞ்சுமம்மா
திருவிளக்கின்மேலிருந்து தேவியரே கொஞ்சுமம்மா
கொஞ்சுமம்மா பெற்றவளே கோபாலன் தங்கையரே
சிரித்தார் முகத்தையம்மா செல்லரிக்கக் கண்டிடுவாய்

பரியாசஞ் செய்தவரைப் பல்லைப்பிடுங்கி வைப்பாய்
மூலைவீட்டுப் பெண்களை நீ முற்றத்திலாட்டிடுவாய்
அரண்மனை பெண்களை நீ அம்பலத்திலாட்டிடுவாய்
பொல்லாத பெண்களை நீ தோற்பாதங்கட்டிடுவாய்
தோற்பாதங் கட்டிடுவாய் துரந்தரியே மாதாவே
நடுவீதியில் கொள்ளிவைத்து நானறியே னென்றிடுவாய்
கடைவீதியில் கொள்ளிவைத்துக் கடக்கப்போய் நின்றிடுவாய்
கடியாவிஷம்போல் கடிக்கவிட்டுப் பார்த்திருப்பாய்

தீண்டாவிஷம்போல் தீண்டவிட்டுப் பார்த்திருப்பாய்
பாம்புகண்ணி நீலியம்மா பழிகாரி மாரிமுத்தே
தாயேதுரந்தரியே சர்வலோக மாதாவே
ஆறாதகோபமெல்லாம் ஆச்சியரேவிட்டுவிடு
கடலில் மூழ்கியம்மா கடுக நீ வாருமம்மா
காவேரியில் தான்முழுகி காமாட்சி வாருமம்மா
வந்தமனை வாழுமம்மா இருந்தமனையீடேறும்
கஞ்சாவெறியன் கனவெறியன் பாவாடை

பாவாடைராயனைத்தான் பத்தினியேதானழையும்
தாயாரும் பிள்ளையுமாய் தற்காக்கவேணுமம்மா
மாதாவும் பிள்ளையுமாய் மனதுவைத்துக்காருமம்மா
ஆத்தாளும் பிள்ளையுமாய் அன்புவைத்துக்காருமம்மா
காரடிபெற்றவளே காலுதலைநோகாமல்
காசிவளநாட்டைவிட்டு காரணியேவந்தருளும்
ஊசிவள நாட்டைவிட்டு உத்தமியே வந்தருளும்
பம்பைமுழங்கிவர பரமளமார்ப்பரிக்க

சிற்றுடுக்கைகொஞ்சிவர சிறுமணிகளோலமிட
வேடிக்கை பார்த்திருந்தாள் வேப்பஞ்சிலையாளும்
கேளிக்கை பார்த்திருந்தாள் கிளிமொழியாள் மாரிமுத்து
சமயபுரத்தாளே சாம்பிராணிவாசகியே
முக்கோணத்துள்ளிருக்கும் முதன்மையாய் நின்றசக்தி
நாற்கோணத்துள்ளிருக்கும் நல்லமுத்து மாரியரே
பஞ்சாக்ஷரப் பொருளே பார்வதியே பெற்றவளே
அறுகோணத்துள்ளிருக்கும் ஆதிபரமேஸ்வரியே

அஷ்டாக்ஷரப்பொருளே ஆனந்த மாரிமுத்தே
நாயகியே மாரிமுத்தே நாரணர் தங்கையரே
ஐம்பத்தோரட்சகியே ஆதிசிவன் தேவியரே
ஆதிசிவன் தேவியரே அம்மை முத்துமாரியரே
பேருலகர க்ஷகியே பெருமாளுடன் பிறப்பே
பெருமாளுடன் பிறந்த பேருலகையாண்டவளே
ஆயனுடன் பிறந்து அம்மைமுத்தாய் நின்றவளே
திரிகோணத்துள்ளிருக்கும் திரிபுரசவுந்தரியே

ஆறாதரப்பொருளே அபிஷேகப்பத்தினியே
மூலாதாரப்பொருளே முன்பிறந்த தேவதையே
தாயேதுரந்தரியே சர்வலோகேஸ்வரியே



பத்திரியால்தான்தடவி பாரமுத்தைத்தானிறக்கும்
வேப்பிலையால்தான் தடவி மெல்லியரே முத்திறக்கும்
மேனியெல்லாம்தான் தடவி மெல்லியரே முத்திறக்கும்
இறங்கிறங்குந்தாயாரே எங்களைக் காப்பாற்றம்மா
முத்தினுமுத்து முகத்திலிடுமாணிமுத்து

எங்கும் நிறைந்த முத்து எல்லோர்க்கும் மாரிமுத்து
பெண்ணாய்ப் பிறந்து நீ பேருலகையாளவந்தாய்
பேருலகையாளவந்தாய் பெண்ணரசிமாரிமுத்தே
நித்தம்பராமரிக்க நிஷ்டூரி நீ பிறந்தாய்
தேசம்பராமரிக்க தெய்வக்கன்னி நீ பிறந்தாய்
கிளியேந்தும் நாயகியே கிளிமொழியே தாயாரே
நித்திய கல்யாணி நீலிபரஞ்சோதி
அம்மணிபார்வதியே ஆணிமுத்து தாயாரே

லோகமெல்லாம் முத்தளக்கும் லோகபரமேஸ்வரியே
வெற்றிக்கொடி பறக்க விருதும்பைதான் முழங்க
எக்காளமூதிவர எங்குங்கிடுகிடென்ன
பஞ்சவர்ணடால்விருது பக்கமெல்லாஞ்சூழ்ந்து
நாதசுரமேளம் நாட்டியங்களாடிவர
தப்பட்டைமேளம் தவில்முரசுதான் முழங்க
கானங்களூதிவர கவிவாணரெச்சரிக்க
சின்னங்களூதிவரல் சிறப்பாய்க்கொடி பிடிக்க

ஜண்டசிலார்பிடிக்கத் தனிமுரசுதானடிக்க
கொடிகள் சிலர்பிடிக்கக் கொக்கரிப்பார் வீரமக்கள்
சாமரைகள்தான்வீச சந்திப்பார் வீரமக்கள்
தாரைபூரிசின்னம் ஆதரபாசமாய்முழங்க
தக்கையுடுக்கைகளும் தவிலோபம்பைகளும்
மிக்கதவுண்டைகளும் மிருதங்கம்தான் முழங்க

நன்மகுடியுஞ்சுதியும் நன்றாகவூதிவர
தம்புருவீணை தக்கபடி வாசிக்க

பம்பையடித்துப் பரமேளந்தானதிர
கெண்செட்டுவாத்தியமும் கிளார்னெட்டு வாத்தியமும்
கொடிவாத்தியம் புதிதாய்க் கொண்டுவந்தாருன் மக்கள்
இத்தனை வாத்தியங்கள் இசைக்கின்றார் பாருமம்மா
பார்த்துக்குளிருமம்மா பாங்கானவுன்மனது
கண்டுகுளிருமம்மா கல்லானவுன்மனது
எப்படியாகிலுந்த னேழைகளுமீடேற
கண்பாரும் கண்பாரும் காரணசவுந்தரியே

இந்திரனுக்கொப்பா யிலங்குமகமாரியரே
கும்பத்தழகியம்மா கொலுமுகத்துராஜகன்னி
சகலகுற்றம் சகலபிழை தாயாரே நீ பொறுப்பாய்
வணங்குகின்ற மக்களுக்கு வாழ்வுமிகவளிப்பாய்
ஓங்கார ரூபியென்று உன்னையே தோத்தரிக்க
படவேட்டில் வீற்றிருக்கும் பரஞ்சோதிதாயாரே
ஆரறிவாருன்மகிமை ஆணிமுத்துதாயாரே
அன்புடவனமெல்லாம் அம்மாவுனைத் தொழுவார்

தேசங்களெங்கும் நிதம் தேவியைத் தோத்தரிப்பார்
எள்ளுக்குளெண்ணெ யைப்போலெங்கும் நிறைந்தசக்தி
எங்கும் நிறைந்தவளே எல்லார்க்குந் தாயாரே
அஞ்சலென்றவஸ்தமொடு அடியார்தமைக்காக்க
வேப்பிலையுங்கையில் விபூதியெங்குந் தூளிதமும்
கருணாகடாட்சம் வைத்துக் காக்கமகமாயிவுந்தன்
கருணாகரவிந்தமதைத் தந்தருளம் மாரிமுத்தே
உன்பேர் நினைத்தால் பில்லிபிசாசு பறந்தோடுமம்மா



சூனியமும்வைப்பும் சுழன்றலைந்தோடுமம்மா
பாதாளவஞ்சனமும் பறந்திடு முன்பேர் நினைத்தால்
சத்தகன்னிமாதாவே சங்கரிமனோன் மணியே
கரகத்தில் வீற்றிருக்கும் கன்னனூர் மாரிமுத்தே
சூலங்கபாலமுடன் துய்யடமரகமும்
ஓங்கார ரூபமம்மா ஒருவரறிவாரோ
மகிமையறிவாரோ மானிடர்கள் யாவருந்தான்
அடியார் தமைக்காக்கும் மந்திர நிரந்தரியே

அடியார்கள் செய்த பிழை ஆச்சியரே நீ பொறுப்பாய்
கோயிலடிமையம்மா கொண்டாடும் பாலகன்னான்
சன்னதிபிள்ளையைத்தான் தற்காரும்பெற்றவளே
உன்னையல்லால் வேறுதுணை ஒருவரையுங் காணேனம்மா
வருந்துவார்பங்கில் வளமாய்க்குடியிருப்பாய்
பாவாடைக்காரியம்மா பராபரியே வங்குகண்ணே
உண்ணுகின்ற தேவதைகள் உடுத்துகின்ற தேவதைகள்
கட்டுப்பட்ட தேவதைகள் காக்கின்ற தேவதைகள்

இருந்துமனையிடத்திலிருந்துண்ணும் தேவதைகள்
சாம்பிராணி தூபத்திற்குட்பட்ட தேவதைகள்
அனைவோரும் வந்திருந்து அடியாரைக்காக்க வேண்டும்
ஓராம்படித்தளமாம் ஓலைப்பூமண்டபமாம்
ஓலைப்பூமண்டபத்தில் உகந்து கொலுவிருந்தாள்
இரண்டாம்படித்தளமாம் இரத்தினசிம்மாதனமாம்
இரத்தினசிம்மாதனத்தி லிருந்தரசுதான் புரிவாள்
மூன்றாம்படித்தளமாம் முனைமுகப்பூச்சாலைகளாம்

முனைமுகப்பூச்சாலைகளில் முந்திகொலுவிருந்தாள்
நான்காம்படித்தளமாம் நவரத்தினமண்டபமாம்
நவரத்னமண்டபத்தில் நாயகியும் வந்தமர்ந்தாள்

ஐந்தாம்படித்தளமாம் அழுத்திய சிம்மாதனமாம்
அழுத்திய சிம்மாதனத்தில் ஆயிகொலுவிருந்தாள்
ஆறாம்படித்தளமாம் அலங்காரச்சாவடியாம்
அலங்காரச்சாவடியில் ஆச்சியமர்ந்திருந்தாள்
ஏழாம்படித்தளமாம் எழுதிய சிம்மாதனமாம்

எழுதிய சிம்மாதனத்தி லீஸ்வரியாள் கொலுவிருந்தாள்
எட்டாம்படித்தளமாம் விஸ்தார மேடைகளாம்
விஸ்தார மேடைதனில் விமலியரும்வந்தமர்ந்தாள்
ஒன்பதாம்படித்தளமாம் ஒருமுகமாய் நின்ற சக்தி
ஒருமுகமாய்நின்றசக்தி உத்தமியுங்கொலுவிருந்தாள்
பத்தாம்படித்தளமாம் பளிங்குமாமண்டபமாம்
பளிங்குமாமண்டபத்தில் பத்தினிகொலுவிருந்தாள்
ஆத்தாள் கொலுவிலேதா னாரார்கொலுவிருந்தார்

ஐங்கரனும் வல்லபையும் அன்பாய்க்கொலுவிருந்தார்
தொந்திவயிற்றோனும் துந்திபியுங்கொலுவிருந்தார்
குழந்தைவடிவேலன் குமரேசர்தானிருந்தார்
தோகைமயிலேறும் சுப்ரமணியர் கொலுவிருந்தார்
சிங்கவாகனமேறுந் தேவிகொலுவிருந்தாள்
ஊர்க்காக்குங்காளி உத்தமியாள் கொலுவிருந்தாள்
துர்க்கையோடுகாளி தொடர்ந்து கொலுவிருந்தாள்
வள்ளிதெய்வானையுடன் மகிழ்ந்து கொலுவிருந்தாள்

பச்சைமலைநாயகியாள் பைங்கிளியாள் தானிருந்தாள்
பூவைகுறத்தியரும் பொருந்திக்கொலுவிருந்தாள்
வான்முனியும் செம்முனியும் வந்து கொலுவிருந்தார்
காத்தான் கறுப்பனோடு கட்டழகர் வீற்றிருந்தார்
தொட்டியத்துச்சின்னானும் துரைமகனுந் தாமிருந்தார்
மருமக்களெல்லாரும் கூடிக்கொலுவிருந்தார்



குமாரர்களெல்லோரும் கூடிக்கொலுவிருந்தார்
ஆரியமாலையுடனனைவோரும் வீற்றிருந்தார்

ஆயன்பெருமா ளனந்தசயனனெனும்
மாயன் பெருமாள் மங்கைமணவாளன்
ஐவரையுங்காத்த ஆதிநெடுமாலும்
பஞ்சவரைக்காத்த பாரளந்தோன் தாமிருந்தார்
கொற்றவரைக்காத்த கோபாலர் தாமிருந்தார்
முட்டையிற்குஞ்சு மிகவறியாப்பாலகரை
பிட்டுவளர்த்தெடுத்த பெருமாள் கொலுவிருந்தார்
செட்டையிற்காத்த ஜெயராம சீதையரும்

அலர்மேலுமங்கையம்மாளரிராமர் சீதையரும்
மங்கையோடு லட்சுமியு மகிழ்ந்து கொலுவிருந்தார்
சீதேவி மூதேவி சேர்ந்து கொலுவிருந்தார்
பாஞ்சாலனெக்கியத்தில் பதுமைபோல் வந்துதித்தார்
பத்தினியாள் துரோபதையும் பாரக்கொலுவிருந்தார்
தளராதனஞ்செயரும் தருமர்கொலுவிருந்தார்
வாயுதேவன் புத்திரனார் மதவீமன்தானிருந்தார்
தேவேந்திரன் புத்திரனார் தேர்விஜயன்தாமிருந்தார்

நகுலசகாதேவர் நலமாய்க் கொலுவிருந்தார்
கானக்குயிலழகர் கட்டழகர் வீற்றிருந்தார்
ஐவர்களுங்கூடி அன்பாய்க்கொலுவிருந்தார்
பட்டத்தரசியான பைங்கிளிசுபத்திரையும்
ஆயன்சகோதரியா ளாரணங்குவீற்றிருந்தார்
நல்லதங்காள்வீரதங்காள் நல்லசங்கோதியம்மாள்
அந்தமுள்ளசுந்தரியா ளாரணங்குவீற்றிருந்தாள்
மலையனூர்தானமர்ந்த மாரிகொலுவீற்றிருந்தாள்

கைச்சூலங்கபறையுங் கையிற்கபாலமுடன்
பச்செலும்புதின்றால் பாலொழுகுமென்று சொல்லி
சுட்டெலும்புதின்றவளே சுடலைவனங்காத்தவளே
அக்காளும் தங்கையரும் ஐந்திரண்டேழுபேரும்
ஐந்திரண்டேழுபேரும் இங்கேகொலுவிருந்தார்
தங்காதுபேய்பில்லி தன்பேரைச் சொன்னவுடன்
அங்காளீஸ்வரியும் அமர்ந்து கொலுவிருந்தார்
தொல்லைவினை நீங்கச் சுகுணமதையளிக்கும்

எல்லைபிடாரியரும் இங்கே கொலுவிருந்தார்
காவலர்கள்தான் புகழக் கனகசிம்மாதனத்தில்
காவல திகாரி கட்டழகி வீற்றிருந்தாள்
இந்தமனைமுதலா வேழுமனையுங்காவல்
சந்ததமுன்காவல் சாதுகுணமாரியரே
காவல்பதனமம்மா கட்டழகுமாரியரே
காவலுக்குள்ளே களவுவரப்போகுதம்மா
பாராசவுக்கிட்டுப் பத்திரமாய்க்காருமம்மா

தீராதவினைகளைத் தீர்க்கும்பராபரியே
தாழும்பதிகளைத் தான் தற்காத்துரட்சியம்மா
ஏழுபிடாரியும் இசைந்து கொலுவிருந்தார்
முத்தாலுராவுத்தன் முனையுள்ளசேவகனும்
முற்றத்தில் வந்துநிதம் முனைந்து கொலுவிருந்தார்
பூவாடை கொங்கையென்று பூரித்துக்காத்திருக்கும்
பாவாடைராயனும் பக்கங்கொலுவிருந்தார்
தாட்சியில்லா சிவசங்கரியாளேது சொல்லும்

ஆட்சியுடன் கொலுவில் அமர்ந்து கொலுவிருந்தார்
தேவிதிருக்கொலுவில் சேர்ந்து கொலுவிருந்தார்
ஆயிதிருக்கொலுவில் அமர்ந்தாரனைவோரும்



மாரிதிருக்கொலுவில் மனமகிழ்ச்சியாயிருந்தார்
வீரிதிருக்கொலுவில் வீற்றிருந்தாரெல்லோரும்
ஆலித்துதானிருந்தார் அம்மைதிருக்கொலுவில்
பாலித்துதானிருந்தார் பராபரியாள்தன்கொலுவில்
கூடிக்கொலுவிருந்தார் கொம்பனையாள் தன்கொலுவில்

நாடிக்கொலுவிருந்தார் நாரணியாள்தன் கொலுவில்
சந்தேகம் போக்கிசாயுச்சியமடைய
சந்தோஷமாகத் தாமிருந்தாரெல்லோரும்
நாடு தழைக்கவம்மா நல்லோர்மிகவாழி
மாடு தழைக்கவம்மா மாநிலத்தோர்மிகவாழி
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும்மங்கையரும்
ஆரியரும்மற்றோரும் யாவர்களுந்தான்படிக்க
முன்னாளில்மூத்தோர் மொழிந்தமாரிதாலாட்டை

இன்னாளில்போற்ற எழுதாயெழுத்ததினால்
அச்சுக்கூடத்ததிபர் அனேகரிதுவரையில்
உச்சிதமாயச்சிலிதை யோங்கிப்பதிப்பித்தார்
கற்றோருமற்றோருங் களிப்பாய்ப்படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல் சுத்தபிரதியதாய்
பாரிலுள்ளோரிக்கதையைப் படித்துத் தொழுதேற்ற
கற்றவரும் மற்றவரும் களிப்படையவாழி
வாழிமிகவாழி வானவர்கள்தான் வாழி

சங்கரனும் சங்கரியும் ஆறுமுகனுந்தான்வாழி
செங்கண்மால்ஸ்ரீராமர் சீதையருந்தான்வாழி
பஞ்சவர்களனைவரும் பைங்கிளியாள் துரோபதையும்
அல்லிசுபத்திரையும் அனைவோருந்தான்வாழி
முப்பத்துமுக்கோடி தேவர்களுந்தான் வாழி
சொற்பெரியசோமசூரியாக்கினிவாழி

நாற்பத்தொண்ணாயிர நன்முனிவர் தான்வாழி
காக்கும்கருடசித்தர் வித்தியாதரர் வாழி

சந்திரனுஞ்சூரியனுந் தானவர்கள்தான் வாழி
இந்திரனுந்தேவர்களும் எல்லோரும்தான் வாழி
கற்பகக்காவும் காமதேனுவும் வாழி
பற்பல தீவுகளும் பஞ்சாக்ஷரம் வாழி
காத்தானோடுவீரன் கறுப்பன் மிக வாழி
சங்கிலி கறுப்பன் சப்பாணிதான் வாழி
மாடனிருளனுடன் வடுகனுந்தான் வாழி
பாவாடைராயனுடன் பலதேவரும் வாழி

இந்தக் கதைகேட்டோர் எந்நாளுந்தான் வாழி
பெருமையுடன் கேட்கும் பெரியோர் வாழி
ஊரெங்கும் கீர்த்தி பெற்ற உத்தமருந்தான் வாழி
பாருலகிலிக் கதையைப் படித்தோர் மிக வாழி
நாரணியாள் தன்கதையை நாள்தோறும் வாசிப்போர்
பாரினில் புத்ரபாக்கியம் படைத்துமிக வாழ்வாரே
மாரிதிருக்கதையை மகிழ்ந்துமே கேட்டோரும்
தேவி திருக்கதையைத் தீர்க்கமாய்க் கேட்டோரும்

பாடிப்படித்தோரும் பாக்கியத்தைத்தான் பெறுவார்
நாடித்துதிப்போரும் நற்கதியைத் தானடைவார்
ஆல்போல்தழைத்து அறுகுபோல் வேரோடி
மூங்கில்போல் சுற்றம் முசியாமல் வாழ்ந்திருப்பார்
மங்களம் மங்களம் மாரியம்மன்தன் கதைக்கு
எங்கும் நிறைந்த ஈஸ்வரிக்கு மங்களம்.

**முற்றும்**